1978 மார்ச் 13]

தானு. இல்லையென்றால் அதைச் சொல்வதற்கு ஏதாவது குழு இருக்கின்றதா? அப்படி இருந்தால் அந்தக் குழுவில் யார் யார் இடம் பெற்றிருக்கிறார்கள் என்பதை அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலைவரவர்களே, அதற்கென்று ஒரு குழு இருக்கிறது. அதில் யார் யார் இருக்கிறார்கள் என்ற தகவலையும் இதுவரை அந்தக் குழு என்ன செய்திருக்கிறது என்ற தகவலையும் இதில் பங்கு கொண்ட உறுப்பினர்களுக்கு நாளை மறுதினம் அனுப்பி வைக்கப் படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தொழிலாளர் நலக் கல்வி.

* 543 வினா—திரு. எஸ். கணேசன்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தொழிலாளர் நலன் பற்றி கல்வி நிலையம் அமைக்கப் பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் பணிகள் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: (அ) ஆம்.

(ஆ) இந்நிலையத்தின பணிகள் பின்வருமாறு:

(1) தொழிலாளர் நலத்துறை அதிகாரிகளுக்கு முறையாக பயிற்சி அளிப்பது;

(2) தொழிலாளர் தலைவர்களுக்கு தொழிலாளர் சட்டங்கள், தொழிலதிபர்—தொழிலாளர் உறவுகள் குறித்து பயிற்சி அளித்தல்;

(3) தொழிலாளர்களுக்கு தொழிலாளர் சட்டங்கள், தொழிலாளர் குறித்த பொருளாதாரவியல் கூறுகள் குறித்து அவர்கள் நன்கு அறிந்து கொள்ளும் வகையில் ஒரு வருடத்திற்கு பயிற்சி அளித்தல், மற்றும்

(4) தொழிலாளர்கள் தங்களுக்குள்ள உரிமைகளை உணர்ந்து கொள்ள தொழிலாளர் நல சட்டங்கள் விதிகள் பற்றி தொகுத்து தமிழில் வெளியிடுதல்.

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS